**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண் 122/மா/2024**

**நாள் 11.02.2026**

P. வெள்ளைச்சாமி
தூத்துக்குடி --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
தூத்துக்குடி மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

தூத்துக்குடி, திரேஸ்புரம், 184–C என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. வெள்ளைச்சாமி என்பவரின் 26.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.08.2024 அன்று பெறப்பட்டு, 122/மா/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தூத்துக்குடி, திரேஸ்புரம், 184–C என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. வெள்ளைச்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 26.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

"தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் கட்டுப்பாட்டின் கீழ், தூத்துக்குடி, மாநகராட்சியின் அதிகாரிகள் / ஊழியர்களின் செயல்பாடுகள் சட்டவிரோதமாகவும் / வெகுஜனவிரோதமாகவும் மோசடியாகவும் உள்ளது. ஏனெனில் மகாத்மா காந்தியடிகள் உப்பு சத்தியாகிரக போராட்டத்தை தொடர்ந்து திரு.இர்வின் அவர்களுடன் ஏற்பட்ட ஒப்பற்ற ஒப்பந்தத்தை மதித்து நினைவூட்டும் வகையில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்கம். (Regd.No.58 of 1950) 1950ல் பதிவு செய்யப்பட்டு 160க்கும் மேற்பட்ட பல்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு சுமார் 200 ஏக்கர்கள் மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள நிலங்களை உப்பு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வகைக்காக அரசே மேற்படி 160 எங்கள் சங்க உறுப்பினர்களுக்கும் பல்வேறு அளவுகளில் (1சென்டு முதல் 1 ஏக்கர் வரை) ஒப்படைவு செய்து தொடர் அனுபவ பாத்தியதையில் இன்று வரை இருந்து வருகிறது. இந்த நிலங்களுக்கு தீர்வைகள் அரசால் ஒப்படைவு பெற்ற எங்கள் சங்கம் 1950–ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை செலுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி நிலத்துக்கு பசிலி 1433க்கான உப்பள குத்தகை ரூபாய் 26.02.2024ல்

ரூபாய் 25,275/– (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரத்து இறுநூற்றி எழுபத்தி ஐந்து மட்டும்) செலுத்தியதற்கான அரசு ரசீது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உப்பளங்களில் உப்பு ஏற்றுமதிக்காக லாரிகள் சென்று வர 1950லிருந்து ஒப்படைவு செய்யப்பட்ட (தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி பகுதி–1, கிராமம் புல எண்.419 முதல் 490 விஸ்தீரணம் 177.02 மற்றும் 187.22 ஏக்கர்) நிலத்தில் எங்கள் சங்க உறுப்பினர்கள் அவரவர் ஒப்படைவு நிலத்தை விட்டுக்கொடுத்து சுமார் 6 கி.மீ பாதை போட்டிருக்கிறோம். எங்களுடைய சொந்த பாதையை பராமரிக்க வருடத்திற்கு ஆகும் செலவையும் நாங்களே சங்கத்தின் மூலம் பார்த்து வருகிறோம்.

இந்த சூழ்நிலையில் தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் (வார்டு 6), வரம்புக்குட்பட்ட (1) மேட்டுப்பட்டி அருகிலும், (2) மாப்பிள்ளையூரணி கிராமம் புல எண்.183/3 விஸ்தீரணம் 1.98.5 ஏர்ஸ் நிலத்தில் அமைந்துள்ள (கடற்கரை ஒரத்தில் – Coastal Regulation Zone) விவேகாநந்தா நகர் அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் உப்பு உற்பத்திக்காக வழங்கப்பட்ட அரசு ஒப்படை நிலத்தில் அத்து மீறி நுழைந்து உப்பளத்தின் வழியாக பல லட்ச ரூபாய் செலவில் பல கிலோ மீட்டர் நீளத்துக்கு தார் ரோடுகளை அமைத்துள்ளதுடன், சாக்கடை கழிவு நீர் மற்றும் மழை நீர் (வாய்கால்) கால்வாய்களையும் கட்டியுள்ளனர். அதனால் நகர பகுதி கழிவு நீர்கள் உப்பள பகுதிக்குள் வந்து உப்பு பாத்திகளை சுகாதாரம் இல்லாமல் மாசுபடுத்துகிறது. இது உப்பு உற்பத்தி தொழிலை முற்றாக்க செய்யப்பட்ட திட்டமிட்ட சதி செயலாகும்.

ஆகவே, அரசு ஒப்படை நிலத்தில் உள்ள எங்களுக்கு சொந்தமான ரோட்டை எங்களுடைய எந்த வித அனுமதியும் இல்லாமல் மாநகராட்சி அதிகாரிகள் மாநகராட்சி (ஸ்மார்ட் சிட்டி) நிதியை வீணடித்து அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உதவும் விதமாகவும் தார் சாலை மற்றும் சாக்கடை நீர் மற்றும் மழை நீர் கான் (வாய்கால்) ஏற்படுத்தியது குறித்து 29.03.2024 தேதிய புகார் மனுக்கள் பதிவு தபால்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை எந்த நடவடிக்கையும் இல்லை.

<u>வேண்டுகோள்</u>

1. மேற்படி மாநகராட்சி அதிகாரிகள் அரசு ஒப்படை நிலத்தில் அத்து மீறி நுழைந்து அமைத்த தார் சாலை மற்றும் சாக்கடை நீர், மழை நீர் கான்களை (வாய்கால்) உடன் அகற்றிவிட உத்தரவிட வேண்டும்.

2. மேற்படி அரசு ஒப்படை நிலத்தில் அத்து மீறி நுழைந்து ஒப்பந்தகாரர்கள் தார் சாலை மற்றும் சாக்கடை நீர், மழை நீர் கான்களை (வாய்கால்) அமைத்துக்கொண்டிருப்பதை நன்கு தெரிந்திருந்தும் / அது குறித்து வந்த புகார்கள் மீது மாநகராட்சி சட்டப்படி எந்த ஒரு நடவடிக்கையும் நாளது தேதி வரை எடுக்காமல் வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டு ஆதாயம் அடைந்து வரும், (1) ஒர்க் இன்ஸ்பெக்டர் (Work Inspector), (2) டேப் இன்ஸ்பெக்டர் (Tap Inspector), (3) இளநிலை நகர பொறியாளர் (Junior Engineer), (4) உதவி பொறியாளர் (Asst. Engineer)ï (5) உதவி ஆணையர் (Asst. Commissioner), (6) நகர உதவி செயற்பொறியாளர் (City Asst. Executive Engineer), (7) துணை நகர பொறியாளர் (Deputy City Engineer), (8) நகர பொறியாளர் (City Engineer) ஆகியோர் மீது கீழ்கண்ட பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து மேற்படி சட்ட விரோத சாலைகள், சாக்கடை நீர், மழை நீர் கான்களை (வாய்கால்) அமைத்ததற்கு ஆன செலவு தொகைகளை வசூலிக்க வேண்டும்.

   Serious negligence and dereliction of duty, resulting in considerable loss to Government "Tamil Nadu Civil Services Discipline and Appeal Rules.". என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 02.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலமும், 16.12.2024 நாளிட்ட கடிதம் வாயிலாகவும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையர் தன்னுடைய 15.07.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 6, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டி மயானத்திற்கு செல்லும் சாலை 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட சாலையாகும். திரேஸ்புரம் மேட்டுப்பட்டி மயான சாலையானது, தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்த போதே சாலை அமைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் சென்று வரவும் மற்றும் பொது மக்கள் துக்க நிகழ்வின் போது இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் மயானத்திற்கு செல்லவும் மேற்படி சாலையினை பயன்படுத்தி வருகின்றனர். பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் பழுதடைந்து இருந்ததால் மேற்படி சாலை பராமரிப்பு செய்து பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் சாலை புதிதாக உருவாக்கப்படவில்லை. ஏற்கனவே இருந்த சாலையினை பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேட்டுப்பட்டி மயான சாலையில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கப்படவில்லை.

மேலும், மாநகராட்சி விதிகளுக்கு முரணாக சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்படாத நிலையில், பணி ஆய்வர், குழாய் ஆய்வாளர், இளநிலை பொறியாளர், உதவிப் பொறியாளர், துணை நகர பொறியாளர், உதவி ஆணையர் மற்றும் நகர பொறியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்ற விவரம் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது."

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. P. வெள்ளைச்சாமி சார்பாக திருவாளர்கள் கே. பாலசுப்ரமணியன் மற்றும் க. தங்கவேலு ஆகியோர் 17.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"தூத்துக்குடி மாநகராட்சியில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்கம். (Regd.No.58 of 1950) 1950ல் பதிவு செய்யப்பட்டு 160க்கும் மேற்பட்ட பல்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு சுமார் 200 ஏக்கர் மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள நிலங்களை உப்பு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வகைக்காக அரசே மேற்படி 160 எங்கள் சங்க உறுப்பினர்களுக்கும் பல்வேறு அளவுகளில் ஒப்படைப்பு செய்யப்பட்டு இதற்கான உப்பள குத்தகை 26.02.2024ல் ரூபாய் 25,275/– எங்கள் சங்கத்தின் மூலம் 1950–ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை செலுத்தப்பட்டு வருகிறது.

உப்பளங்களில் உப்பு ஏற்றுமதிக்காக லாரிகள் சென்று வர 1950லிருந்து ஒப்படைவு செய்யப்பட்ட நிலத்தில் எங்கள் சங்க உறுப்பினர்கள் அவரவர் ஒப்படைவு நிலத்தை விட்டுக்கொடுத்து சுமார் 6 கி.மீ பாதை போட்டிருக்கிறோம். எங்களுடைய சொந்த பாதையை பராமரிக்க வருடத்திற்கு ஆகும் செலவையும் நாங்களே சங்கத்தின் மூலம் பார்த்து வருகிறோம்.

இந்த சூழ்நிலையில் தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் (வார்டு 6), வரம்புக்குட்பட்ட (1) மேட்டுப்பட்டி அருகிலும், (2) மாப்பிள்ளையூரணி கிராமம் புல எண்.183/3 விஸ்தீரணம் 1.98.5 ஏர்ஸ் நிலத்தில் அமைந்துள்ள (கடற்கரை ஓரத்தில் – Coastal Regulation Zone) விவேகானந்தா நகர் அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் உப்பு உற்பத்திக்காக வழங்கப்பட்ட அரசு ஒப்படை நிலத்தில் அத்து மீறி நுழைந்து உப்பளத்தின் வழியாக பல லட்ச ரூபாய் செலவில் பல கிலோ மீட்டர் நீளத்துக்கு தார் ரோடுகளை அமைத்துள்ளதுடன், சாக்கடை கழிவு நீர் மற்றும் மழை நீர் (வாய்கால்) கால்வாய்களையும் கட்டியுள்ளதால், நகர பகுதி கழிவு நீர்கள் உப்பள பகுதிக்குள் வந்து உப்பு பாத்திகளை சுகாதாரம் இல்லாமல் மாசுபடுத்துகிறது. இது உப்பு உற்பத்தி தொழிலை முற்றாக்க செய்யப்பட்ட திட்டமிட்ட சதி செயலாகும்.

தூத்துக்குடி மாநகராட்சியால் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றி வரும் ரோடுகள் மற்றும் கிளை ரோடுகள் மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவில்லை மற்றும் தூத்துக்குடி மாநகராட்சியால் பராமரிக்கப்படவில்லை என தூத்துக்குடி மாநகராட்சியின் பொது தகவல் அலுவலர் 2019–ம் ஆண்டு தகவல் அளித்துள்ளார்.

மேற்படி அரசு நில ஆக்கிரமிப்பு அகற்ற சமூக ஆர்வலர்களால் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் W.P.(MD) No.12789 of 2023 ரிட் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

ஆகவே, அரசு ஒப்படை நிலத்தில் உள்ள எங்களுக்கு சொந்தமான ரோட்டை எங்களுடைய எந்த வித அனுமதியும் இல்லாமல் மாநகராட்சி அதிகாரிகள் மாநகராட்சி (ஸ்மார்ட் சிட்டி) நிதியை வீணடித்து அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உதவும் விதமாகவும் தார் சாலை மற்றும் சாக்கடை நீர் மற்றும் மழை நீர் கான் (வாய்கால்) அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, தூத்துக்குடி மாநகராட்சி அதிகாரிகள் அரசு ஒப்படை நிலத்தில் அத்து மீறி நுழைந்து அமைத்த தார் சாலை மற்றும் சாக்கடை நீர், மழை நீர் கான்களை (வாய்கால்) உடன் அகற்றிடவும் வீணடிக்கப்பட்டபணத்தை தொடர்புடைய அதிகாரிகளிடம் வசூல் செய்திடவும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணியுடன் கேட்டுக் கொள்கிறோம்.''.

6. மேலும், மனுதாரர் திரு. P. வெள்ளைச்சாமி சார்பாக 17.07.2025 அன்று விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட அவரது எழுத்துப்பூர்வமான 15.07.2025 நாளிட்ட வாதுரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"1. என்னுடைய 29.03.2024 தேதிய புகார் மனு மீது மாநகராட்சியில் எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை. 2019–ம் வருடம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் படி தூத்துக்குடி மாநகராட்சியில் பெறப்பட்ட தகவல்கள்படி காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன்கிளை ரோடுகள் கடற்கரை கட்டுப்பாட்டு பகுதியில் அமைகிறது எனவும், காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றி வரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கவில்லை. உப்பு இலாக்காவை சார்ந்ததாகும்.'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

2. தூத்துக்குடி மாநகராட்சி, கட்டுப்பாட்டில் இல்லாத செயற்கைக் கோள் படம் காட்டும் (Unsurvey Land) நிலத்தை தமிழ்நாடு அரசு எங்கள் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்கம் மற்றும் எங்கள் சங்க உறுப்பினர்களுக்கு பல்வேறு அளவுகளில் (1 சென்ட் முதல் 1 ஏக்கர் வரை) ஒப்படைவு செய்து தொடர் அனுபவ பாத்தியதையில் 1950 முதல் இன்றுவரை இருந்து வரும், மேற்படி உப்பள நிலங்களுக்கு எங்கள் சங்கம் உறுப்பினர்கள் சார்பில் நாளது தேதி வரி நிலுவையில்லாமல் செலுத்தி வருவதுடன், எங்கள் சங்க கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள உப்பளங்களில் உப்பு ஏற்றுமதிக்காக லாரிகள் சென்று வர 1950–லிருந்து ஒப்படைவு செய்யப்பட்ட எங்கள் சங்க உறுப்பினர்கள் அவரவர் ஒப்படைவு நிலத்தை விட்டுக் கொடுத்து உப்பு சங்கம் பாதை மேப் (1964 # Combined Sketch)இல் 1964–ம் வருடம் குறியீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் சுமார் 6 கிமீ பாதை / ரோடு போட்டிருக்கிறோம். எங்களுடைய சொந்த பாதை / ரோடு பராமரிக்க வருடத்திற்கு ஆகும் செலவையும் நாங்களே சங்கத்தின் மூலம் பார்த்து வருகிறோம். இந்த சூழ்நிலையில் எங்கள் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்க கட்டுப்பாட்டில் உள்ள உப்பள நில பகுதியில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆதாயம் அடைவதற்காக சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். மேலும் அரசு நில ஆக்கிரமிப்பில் ஒரு பகுதியாக “கிராம கணக்குகளின்படி சர்க்கார்–புஞ்சை–தரிசு எனவும் தடையாணைப் பதிவேட்டிலும் உள்ள தூத்துக்குடி வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமம், புல எண்: 183/3 வீஸ்திரணம் 1.98.5 ஏர்ஸ்” அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாநகராட்சி அதிகாரிகள் தார் ரோடு போட்டும் மாநகராட்சி பணத்தை விரையம் செய்துள்ளார்கள். மேற்படி அரசு நில ஆக்கிரமிப்பை அகற்ற சமூக ஆர்வலர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP (MD) No.12789 of 2023 ரிட் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

3. மத்திய அரசு பத்திரிக்கை விழிப்புணர்வு விளம்பரச் செய்தியின்படி “Access to Information can block the path to corruption”. சட்ட விரோதமாக உப்பள பகுதிக்குள் தார் ரோடுகள் போட்டதற்கு ஆன செலவு மற்றும் சில பல தகவல்கள் ஆவணங்கள் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 படி (RTI) தகவல் கோரி மாநகராட்சியில் மனு செய்தாலும் சட்டவிரோதமாக செயல்படும் அதிகாரிகள் முழுமையான தகவல்கள் நாளது தேதிவரை வழங்குவதும் இல்லை. ஆக மொத்தத்தில் மக்கள் வரிப்பணம், (ஸ்மார்ட் சிட்டி) நிதி, மத்திய, மாநில அரசின் பல்வேறு ஆக்க பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பல நூறு கோடி ரூபாய்களை மாநகராட்சி அதிகாரிகள் வீணடித்துள்ளனர்.

4. தற்போது எங்கள் சங்க எல்லைக்குட்பட்ட அரசு ஒப்படை நிலத்தில் மாநகராட்சி அத்துமீறி சாக்கடை நீர் மற்றும் மழை நீர் விட்டுவருவதுடன், அதில் பல லட்சரூபாய் செலவில் மாநகராட்சி கான் (வாய்கால்) ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான ஆயத்தபணி நடந்து வருகிறது. மேலும் அவ்வாறு செய்தால் பொதுமக்கள் சாப்பிடும் உப்பு பாழாகி சுகாதார சீர்கேடு ஏற்பட்டு எங்கள் உப்பு உற்பத்தி தொழில் மிகவும் பாதிக்கப்படும். மேலும் எங்கள் உப்பு உற்பத்தி செய்யும் நிலப்பகுதி கடல் மட்டத்துக்கு பள்ளமாக இருப்பதால் கழிவு நீர் உப்பளத்துக்குள் புகுந்து விடும் என்பதையும் தங்கள் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஆகவே மாநகராட்சி அதிகாரிகள் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்க கட்டுப்பாட்டில் உள்ள உப்பள நில பகுதியில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக அரசு நில

ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் தார் ரோடு அமைத்துள்ளதால் தூத்துக்குடி மாநகராட்சி மக்கள் வரிப்பணம், (ஸ்மார்ட் சிட்டி நிதி) மத்திய, மாநில அரசின் பல்வேறு ஆக்க பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பல நூறு கோடி ரூபாய்களை மாநகராட்சி அதிகாரிகள் வீணடித்துள்ளனர். 29.03.2024 தேதிய புகார் மீது G.O. Ms. No.99 நாள் 21.09.2015–ன்படி) நாளது தேதி வரை எந்த ஒரு நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி அதிகாரிகள் மீதும், ஒப்படை நிலத்தில் சாலைகள் அமைத்த அது அது தொடர்புடைய புகார் மனு குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் ஒவ்வொருவரும் மீதும் Serious negligence and dereliction of duty, resulting in considerable loss to Government "Tamilnadu Civil Services Discipline and Appeal Rules"–படி நடவடிக்கை எடுப்பதுடன், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் தக்கதென கருதும் மற்ற தீர்வுகளையும் வழங்கி உத்திரவிட வேண்டுமாய் புகார் முறையீட்டாளர் கேட்டுக் கொள்வதுடன், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மின்னஞ்சல் மூலம் / நேரில் சார்பு செய்யப்பட்ட இந்த எழுத்துப்பூர்வமான வாதுரையை என்னுடைய புகார் மனு குறித்த ஆணையில் "நடுவர்'' பதிவு செய்யாமல் ஆணையிட்டால் இதுவே தொடர்புடைய நீதிமன்றத்தில், தொடர்புடைய மனுவில், தாக்கல் செய்வதற்கு உரிய தகுமுறை சாட்சியமாகவும் சான்று ஆவணமாகவும் ஆகிவிடும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம். நடுவர் உத்தரவு படி மேல் அதிகாரிகள் (மாநகராட்சி அதிகாரிகள் மீது) எடுத்த நடவடிக்கைகள் அனைத்தையும் மனுதாரருக்கு தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தூத்துக்குடி மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 17.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 6, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டி மயானத்திற்கு செல்லும் சாலை 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட சாலையாகும். திரேஸ்புரம் மேட்டுப்பட்டி மயான சாலையானது, தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்த போதே சாலை அமைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் சென்று வரவும் மற்றும் பொது மக்கள் துக்க நிகழ்வின் போது இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் மயானத்திற்கு செல்லவும் மேற்படி சாலையினை பயன்படுத்தி வருகின்றனர். பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் பழுதடைந்து இருந்ததால் மேற்படி சாலை பராமரிப்பு செய்து பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் சாலை புதிதாக உருவாக்கப்படவில்லை. ஏற்கனவே இருந்த சாலையினை பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேட்டுப்பட்டி மயான சாலையில் புதிதாக மழைநீர் வடிகால்அமைக்கப்படவில்லை.

மேலும், மாநகராட்சி விதிகளுக்கு முரணாக சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்படாத நிலையில், பணி ஆய்வர், குழாய் ஆய்வாளர், இளநிலை பொறியாளர், உதவிப் பொறியாளர், துணை நகர பொறியாளர், உதவி ஆணையர் மற்றும் நகர பொறியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்து கொள்கிறேன்.''.

8. மனுதாரர் குறிப்பிடும் இடம் தொடர்பாக தெளிவான அறிக்கை ஒன்றினை அனுப்பிட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் 27.10.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக கோரப்பட்டது. அறிக்கை பெறப்படாததால் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலர் மீண்டும் 10.12.2025 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

9. தூத்துக்குடி மாநகராட்சி இளநிலை பொறியாளர் 10.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

"தூத்துக்குடி மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் அவர்கள் 17.7.2025 அன்று அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை இம்முறைமன்ற நடுவர் முன் பதிவு செய்கிறேன்.

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 6, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டி மயானத்திற்கு செல்லும் சாலை 20 ஆண்டுகளுக்கு முன்பு திரேஸ்புரம் மேட்டுப்பட்டி மயான சாலை தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்த போதே அமைக்கப்பட்டு உப்பள தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களும் பயன்படுத்திக் கொள்ள அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பழுதடைந்த சாலையானது தற்போது தார்சாலையாக தூத்துக்குடி மாநகராட்சியால் போடப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலரால் மாண்பமை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் நில ஆக்கிரமிப்பு தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் W.P.(MD) No. 12789 of 2023 குறிப்பிடப்பட்டுள்ள புல எண் 183/3 தற்போது புதுப்பிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள சாலையின் வரம்பிற்குள் வருகிறதா என்பது குறித்து அளவீடு செய்யுமாறு தூத்துக்குடி மாநகராட்சி சர்வேயர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி சர்வேயர் உடன் இணைந்து மேற்கண்ட அளவீடு செய்யப்பட்டு அது குறித்து அறிக்கையினை 15 தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.''.

10. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் 8.12.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| குற்றச்சாட்டு 1 | "தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் கட்டுப்பாட்டின் கீழ், தூத்துக்குடி, மாநகராட்சியின் அதிகாரிகள் / ஊழியர்களின் செயல்பாடுகள் சட்டவிரோதமாகவும் / வெகுஜனவிரோதமாகவும் மோசடியாகவும் உள்ளது. ஏனெனில் மகாத்மா காந்தியடிகள் உப்பு சத்தியாகிரக போராட்டத்தை தொடர்ந்து திரு.இர்வின் அவர்களுடன் ஏற்பட்ட ஒப்பற்ற ஒப்பந்தத்தை மதித்து நினைவூட்டும் வகையில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்கம். (Regd.No.58 of 1950) 1950ல் பதிவு செய்யப்பட்டு 160க்கும் மேற்பட்ட பல்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் | தூத்துக்குடி மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் காந்தி இர்வின் உப்பு சங்கத்திற்கு எதிராகவோ வெகுஜன விரோதமாகவோ மோசடியாக செயல்படவில்லை என்ற விபரம் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு சுமார் 200 ஏக்கர்கள் மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள நிலங்களை உப்பு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வகைக்காக அரசே மேற்படி 160 எங்கள் சங்க உறுப்பினர்களுக்கும் பல்வேறு அளவுகளில் (1சென்டு முதல் 1 ஏக்கர் வரை) ஒப்படைவு செய்து தொடர் அனுபவ பாத்தியதையில் இன்று வரை இருந்து வருகிறது. இந்த நிலங்களுக்கு தீர்வைகள் அரசால் ஒப்படைவு பெற்ற எங்கள் சங்கம் 1950–ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை செலுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி நிலத்துக்கு பசிலி 1433க்கான உப்பள குத்தகை ரூபாய் 26.02.2024ல் ரூபாய் 25,275/– (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரத்து இருநூற்றி எழுபத்தி ஐந்து மட்டும்) | |
| குற்றச்சாட்டு 2 | உப்பளங்களில் உப்பு ஏற்றுமதிக்காக லாரிகள் சென்று வர 1950லிருந்து ஒப்படைவு செய்யப்பட்ட (தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி பகுதி–1, கிராமம் புல எண்.419 முதல் 490 விஸ்தீரணம் 177.02 மற்றும் 187.22 ஏக்கர்) நிலத்தில் எங்கள் சங்க உறுப்பினர்கள் அவரவர் ஒப்படைவு நிலத்தை விட்டுக்கொடுத்து சுமார் 6 கி.மீ பாதை போட்டிருக்கிறோம். எங்களுடைய சொந்த பாதையை பராமரிக்க வருடத்திற்கு ஆகும் செலவையும் நாங்களே சங்கத்தின் மூலம் பார்த்து வருகிறோம். | குற்றச்சாட்டு விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. |
| குற்றச்சாட்டு 3 | இந்த சூழ்நிலையில் தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் (வார்டு 6), வரம்புக்குட்பட்ட (1) மேட்டுப்பட்டி அருகிலும், (2) மாப்பிள்ளையூரணி கிராமம் புல எண்.183/3 விஸ்தீரணம் 1.98.5 ஏர்ஸ் நிலத்தில் அமைந்துள்ள (கடற்கரை ஓரத்தில் – Coastal Regulation Zone) விவேகாநந்தா நகர் அரசு நில | முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்ட பகுதியானது தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டல மேட்டுப்பட்டி பகுதியாகவும் மேற்படி பகுதியில் சுமார் 450 குடும்பத்தினர்கள் (சுவாமி விவேகானந்தா காலனி, மேட்டுப்பட்டி வசித்து) வருகிறார்கள். மேற்படி பொது மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| | ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் உப்பு உற்பத்திக்காக வழங்கப்பட்ட அரசு ஒப்படை நிலத்தில் அத்து மீறி நுழைந்து உப்பளத்தின் வழியாக பல லட்ச ரூபாய் செலவில் பல கிலோ மீட்டர் நீளத்துக்கு தார் ரோடுகளை அமைத்துள்ளதுடன், சாக்கடை கழிவு நீர் மற்றும் மழை நீர் (வாய்கால்) கால்வாய்களையும் கட்டியுள்ளனர். அதனால் நகர பகுதி கழிவு நீர்கள் உப்பள பகுதிக்குள் வந்து உப்பு பாத்திகளை சுகாதாரம் இல்லாமல் மாசுபடுத்துகிறது. இது உப்பு உற்பத்தி தொழிலை முற்றாக்க செய்யப்பட்ட திட்டமிட்ட சதி செயலாகும். | அன்றாட பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஏற்கனவே பஞ்சாயத்து கால கட்டத்தில் அமைக்கப்பட்ட தார்சாலை சிதிலமடைந்த தார்சாலையாக இருந்தது. தற்போது மாநகராட்சியின் மூலம் (உப்பளபகுதியில் வசிக்கும்) பொதுமக்கள் பயன்படுத்த மாநகராட்சி எல்லைவரை தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தார் சாலையை (சுவாமி விவேகானந்தா காலனி) ஒட்டி மழைநீர் வடிகாலோ கழிவு நீர்க்கால்வாயோ, அமைக்கப்படவில்லை. மேலும் லூர்தம்மாள்புரம் திருவள்ளுவர் நகர் மற்றும் மயான சாலை பகுதியில் கடந்த 2023ம் ஆண்டு பெரும் மழைப் பொழிவினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மேற்படி பகுதி முழுவதும் பொதுமக்கள் பாதிப்படைந்ததை தொடர்ந்து அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில் மழைவெள்ளம் பாதிக்காதவாறு மழைநீர்வடிகால் உப்பள பகுதிவரை அமைக்கப் பட்டுள்ளது. உப்பள பகுதியில் வடிகாலில் உள்ள நீர் செல்லாதவாறு மாற்று வழியில் செல்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு 15வது மத்திய நிதிக்கழு மானியம் 2025–2026ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மதிப்பீடு தொகை 202.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி (ந.க.எண் DMA/245/2025EA2 நாள் 4.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி துவங்க நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. |
| குற்றச்சாட்டு 4 | ஆகவே, அரசு ஒப்படை நிலத்தில் உள்ள எங்களுக்கு சொந்தமான ரோட்டை எங்களுடைய எந்த வித அனுமதியும் இல்லாமல் மாநகராட்சி அதிகாரிகள் மாநகராட்சி (ஸ்மார்ட் சிட்டி) நிதியை வீணடித்து அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உதவும் | மாநகராட்சி நிர்வாகம் அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு எந்தவித உதவும் நோக்கில் செயல்படவில்லை. பொதுமக்களின் அடிப்படை வசதியை கருத்தில் கொண்டு மட்டுமே தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால் |

| | | |
|---|---|---|
| | விதமாகவும் தார் சாலை மற்றும் சாக்கடை நீர் மற்றும் மழை நீர் கான் (வாய்க்கால்) ஏற்படுத்தியது குறித்து 29.03.2024 தேதிய புகார் மனுக்கள் பதிவு தபால்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை எந்த நடவடிக்கையும் இல்லை | அமைக்கப்பட்டுள்ளது. இதில் அரசு நிதியை எவ்விதத்திலும் வீணடிக்கப்படவில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பொது மக்களின் வெள்ளப் பாதிப்பை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களின் நலனுக்காக மட்டுமே மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

9. மனுதாரரின் மனு, மற்றும் அவரது எழுத்துபூர்வமான வாதுரை, மனுதாரர் சார்பாக திருவாளர்கள் கே. பாலசுப்ரமணியன் மற்றும் க. தங்கவேலு ஆகியோர் அளித்த வாக்குமூலம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைபொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

தூத்துக்குடி காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்கம் 1950ல் பதிவு செய்யப்பட்டு 160க்கும் மேற்பட்ட பல்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு சுமார் 200 ஏக்கர் மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள நிலங்களை உப்பு உற்பத்தி செய்வதற்கு, அரசே மேற்படி 160 சங்க உறுப்பினர்களுக்கும் பல்வேறு அளவுகளில் நிலங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டு இதற்கான உப்பள குத்தகை மேற்கண்ட சங்கத்தின் மூலம் 1950-ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், இந்த ஒப்படைவு செய்யப்பட்ட நிலத்தில் சங்க உறுப்பினர்கள் அவரவர் ஒப்படைவு நிலத்தை விட்டுக் கொடுத்து சுமார் 6 கி.மீ பாதை போட்டு, அப்பாதையை பராமரிக்க வருடத்திற்கு ஆகும் செலவையும் சங்கத்தின் மூலம் செய்து வருவது என்பதும், இந்த சூழ்நிலையில் தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் (வார்டு 6), வரம்புக்குட்பட்ட (1) மேட்டுப்பட்டி அருகிலும், (2) மாப்பிள்ளையூரணி கிராமம் புல எண்.183/3 விஸ்தீரணம் 1.98.5 ஏர்ஸ் நிலத்தில் அமைந்துள்ள (கடற்கரை ஓரத்தில் – Coastal Regulation Zone) விவேகானந்தா நகர் அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் நோக்கில் உப்பு உற்பத்திக்காக வழங்கப்பட்ட அரசு ஒப்படை நிலத்தில் அத்து மீறி நுழைந்து உப்பளத்தின் வழியாக பல லட்ச ரூபாய் செலவில் பல கிலோ மீட்டர் நீளத்துக்கு தார் ரோடுகளை அமைத்துள்ளது என்பதும், இச்சாலையில் சாக்கடை கழிவு நீர் மற்றும் மழை நீர் (வாய்கால்) கால்வாய்களையும் கட்டியுள்ளதால், நகர பகுதி கழிவு நீர்கள் உப்பள பகுதிக்குள் வந்து உப்பு பாத்திகளை சுகாதாரம் இல்லாமல் மாசுபடுத்துப்பட்டு, உப்பு உற்பத்தி தொழிலை முற்றாக்க செய்யப்பட்ட திட்டமிட்ட செயல் என்பதும், மேற்கண்ட சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றி வரும் ரோடுகள் மற்றும் கிளை ரோடுகள் மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவில்லை மற்றும் தூத்துக்குடி மாநகராட்சியால் பராமரிக்கப்படவில்லை என தூத்துக்குடி மாநகராட்சியின் பொது தகவல் அலுவலர் 2019-ம் ஆண்டு தகவல் அளித்துள்ளார் என்பதும், அரசு நில ஆக்கிரமிப்பு அகற்ற சமூக ஆர்வலர்களால் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் W.P.(MD) No.12789 of 2023 ரிட் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், ஆகவே, அரசு ஒப்படை நிலத்தில் உள்ள மேற்கண்ட சங்கத்திற்கு சொந்தமான ரோட்டை சங்கத்திடம் எந்த வித அனுமதியும் இல்லாமல் அத்துமீறி நுழைந்து மாநகராட்சி அதிகாரிகள் மாநகராட்சி (ஸ்மார்ட் சிட்டி) நிதியை வீணடித்து அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உதவும் விதமாகவும் தார் சாலை

மற்றும் சாக்கடை நீர் மற்றும் மழை நீர் கான் (வாய்கால்) அமைக்கப்பட்டுள்ளதை அகற்றிடவும், வீணடிக்கப்பட்ட பணத்தை தொடர்புடைய அதிகாரிகளிடம் வசூல் செய்திடவும் கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண் 6, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டி மயானத்திற்கு செல்லும் சாலை 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது என்பதும், திரேஸ்புரம் மேட்டுப்பட்டி மயான சாலையானது தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்த போதே சாலை அமைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் சென்று வரவும் மற்றும் பொது மக்கள் துக்க நிகழ்வின் போது, இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் மயானத்திற்கு செல்லவும் இச்சாலையினை பயன்படுத்தி வருகின்றனர் என்பதும், இச்சாலை பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் பழுதடைந்து இருந்ததால், மேற்படி சாலை பராமரிப்பு செய்யப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதும், ஆனால் சாலை புதிதாக உருவாக்கப்படவில்லை என்பதும் மற்றும் மேட்டுப்பட்டி மயான சாலையில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கப்படவில்லை என்பதும், மாநகராட்சி விதிகளுக்கு முரணாக சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்படாத நிலையில், பணி ஆய்வர், குழாய் ஆய்வாளர், இளநிலை பொறியாளர், உதவிப் பொறியாளர், துணை நகர பொறியாளர், உதவி ஆணையர் மற்றும் நகர பொறியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதும் மேலும் உப்பள பகுதியில் வடிகாலில் உள்ள நீர் செல்லாதவாறு மாற்று வழியில் செல்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2025–2026ம் ஆண்டு திட்டத்தின்கீழ் மதிப்பீடு தொகை 202.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் நிர்வாக அனுமதி (ந.க.எண் DMA/245/2025EA2 நாள் 4.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி துவங்க நடவடிக்கையில் உள்ளது என்றும் மாநகராட்சி நிர்வாகம் அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு எந்தவித உதவும் நோக்கில் செயல்படவில்லை என்பதும், பொதுமக்களின் அடிப்படை வசதியை கருத்தில் கொண்டு மட்டுமே தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், இதில் அரசு நிதியை எவ்விதத்திலும் வீணடிக்கப்படவில்லை என்றும் மேலும் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பொது மக்களின் வெள்ளப் பாதிப்பை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களின் நலனுக்காக மட்டுமே மேற்படி பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதும், எதிர்மனுதாரரான தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நிலையில், தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 6, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டி மயானத்திற்கு செல்லும் சாலை 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது என்றும், திரேஸ்புரம் மேட்டுப்பட்டி மயான சாலையானது தூத்துக்குடி ரூரல் ஊராட்சியாக இருந்த போதே சாலை அமைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் சென்று வரவும் மற்றும் பொது மக்கள் துக்க நிகழ்வின் போது, இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் மயானத்திற்கு செல்லவும் இச்சாலையினை பயன்படுத்தி வருகின்றனர் என்றும், இச்சாலை பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் பழுதடைந்து இருந்ததால், இதனை பராமரிப்பு செய்து பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது என்றும், ஆனால் சாலை புதிதாக உருவாக்கப்படவில்லை என்றும், மற்றும் மேட்டுப்பட்டி மயான சாலையில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கப்படாத நிலையில், மனுதாரர் தெரிவித்த மாநகராட்சி அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என தூத்துக்குடி மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தூத்துக்குடி இருக்கன்குடியை சேர்ந்த திரு எம். கணேசன் என்பவருக்கு, தூத்துக்குடி மாநகராட்சியின் பொதுதகவல் அலுவலர் கடித ந.க எண் இ1/1898/2019 வ.ம. நாள் 9.7.2019ல் அளித்துள்ள பதிலில்,

"(அ) தூத்துக்குடி காளவாசல் உப்பளங்களுக்கு செல்லும் ரோடு உப்பு இலாக்காவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

(ஆ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றி வரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கவில்லை.

(இ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி மூலம் புதியதாக ரோடு மற்றும் மராமத்து பணிகள் செய்யவில்லை.

(ஈ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் உப்பு இலாக்காவை சார்ந்ததாகும்.

(உ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சியிடம் ஒப்படைக்கவில்லை. உப்பு இலாக்காவை சார்ந்ததாகும்.

(ஊ) கடந்த 10 ஆண்டுகளில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி மூலம் நிர்வாகம் செய்யவில்லை.

(எ) கடந்த 10 ஆண்டுகளில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றிவரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் மாநகராட்சி மூலம் நிர்வாகம் செய்யவில்லை.

(ஏ) காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர்களின் சங்கத்தை சேர்ந்த உப்பளங்களை சுற்றி வரும் ரோடுகள் மற்றும் அதன் கிளை ரோடுகள் கடற்கரை கட்டுபாடு பகுதியில் அமைகிறது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, மனுதாரர், காந்தி இர்வின் உப்பு உற்பத்தியளார்களின் சங்க கட்டுப்பாட்டு பகுதியின் உப்பு சங்கம் பாதை மேப் என 1964ம் வருடம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்கூறிய இடங்களில் சுமார் 6 கி.மீ பாதை/ரோடு சங்கம் (GISMA) மூலம் போடப்பட்டு அதனை பராமரிக்க வருடத்திற்கு ஆகும் செலவையும் சங்கத்தின் மூலம் செலவு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் தெரிவித்துள்ள தூத்துக்குடி மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள தார்ரோடு, அங்கு உள்ள ஆக்கிரமிப்பு நிலப்பகுதியின் கிராம கணக்குகளின்படி சர்க்கார்- புஞ்சை – தரிசு எனவும், தடையாணைப் பதிவேட்டில் உள்ள தூத்துக்குடி வட்டம் மாப்பிள்ளையூரணி கிராமம் புல எண் 183/3 வீஸ்தீரணம் 1.98.5 ஏர்ஸ் ஒரு பகுதி என்பது பற்றி தெளிவுரை அனுப்புமாறு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் 27.10.2025 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதத்தில் கோரப்பட்டும், இதுவரை தெளிவுரை பெறப்படவில்லை.

இந்நேர்வில் மனுதாரர் தனது மனுவில் காந்தி இர்வின் உப்பு உற்பத்தியாளர் சங்க கட்டுப்பாட்டில் உள்ள உப்பள நிலப்பகுதியில் பல இடங்களில் தூத்துக்குடி மாநகராட்சி அத்துமீறி நுழைந்து சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவும் வகையில் (1) தார்ரோடு (2) கழிவுநீர் கால்வாய் (3) குடிநீர் பைப்லைன் ஆகியவற்றை பல கோடி ரூபாயில் அமைத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரியது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P (MD) No. 12789 of 2023 வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பது மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,

Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. P. வெள்ளைச்சாமி,
கதவு எண் 184–C, திரேஸ்புரம், தூத்துக்குடி–628 002.

(2) ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி.

(3) உதவி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032